IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

OS.NO. - OS 100/2020

D.W.1 - Surya Kumar

DATE - 04.09.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.09.2025.

பி.வா.சா.1குறுக்கு விசாரணை

நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது பிராமண பத்திரத்தில் நான் என்ன வேலை செய்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் கூலி வேலை செய்கிறேன். எனக்கு சொந்த வீடு இல்லை. எனது அப்பாவின் பெயரில் உள்ளது. நான் என் அப்பாவிற்கு ஒரே பையன். எனக்கு நில புலன் இல்லை. எனக்கு வருட வருமானம் 60,000/-. கூலி வேலை என்றால் நான் மேஸ்திரி வேலை, நிலத்து வேலை, ரோடு வேலை, யார் என்ன வேலைக்கு கூப்பிட்டாலும் அதற்கு செல்வேன். எனக்கு திருமணம் ஆகவில்லை. வாதியை எனக்கு 20 வருடமாக தெரியும். வாதி என்ன படித்து இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. வாதி குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது. வாதி செஞ்சி கிராமத்தை சேர்ந்தவர். நான் ஆயக்குலத்தை சேர்ந்தவன். வாதிக்கு இடம் இருக்கிறது எத்தனை ஏக்கர் என்று எனக்கு தெரியாது. வாதி விவசாயம் செய்து வருமானம் ஈட்டுகிறார் என்று அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி மருந்து ஆளுநராக பணிபுரிகிறார் என்றால் எனக்கு தெரியாது. வாதி என்னிடம் 2013 மார்ச்சு மாதம் 30,000/- நான் கடனாக பெற்றதற்கு செக்யூரிட்டியாக காட்பாடி SBI

கிளையில் பூர்த்தி செய்யப்படாத 3 காசோலைகளையும் 3 புரோனோட்டு வெற்று பச்சை பேப்பர், 3 வெள்ளை நிற பேப்பர் வாங்கிக்கொண்டதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. (வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 04.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

Sd./ P.V.Sandilyan,
Additional District Judge(FTC),
Vellore.